(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(6).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2021 மார்ச் 22 திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

*

பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு,—

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளங்காண்பதும்; எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்களை செயற்படுத்த அவசியமான திருத்தங்களை முன்மொழிவதும் அவசியமாகவிருப்பதாலும்;

(அ) தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் பொருத்தமான திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும்; மற்றும்

(ஆ) அவற்றிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும்;

பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

2. (அ) அதன் தவிசாளரும் குழு உறுப்பினர்களும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் பிரகாரம் குழு பதினைந்து (15) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும்

(இ) முதலாவது அமர்விற்குப் பின்னர் ஆறு மாதங்களினுள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படும் அத்தகையதொரு காலப்பகுதியினுள் குழு பாராளுமன்றத்திற்கு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. அக் குழுவிற்கு —

(அ) குழுவின் கூட்ட நடப்பெண் தொடர்பில் தீர்மானமெடுப்பதற்கும்;

(ஆ) ஒரு நபரை அதன் முன் ஆஜராகுமாறு அழைக்கவும், ஒரு பத்திரத்தை அல்லது அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு எந்தவொரு நபருக்கும் கட்டளையிடவும் மேற்குறியவற்றை முழுமையாகக் கருத்திற்கொள்ள குழு அவசியமெனக் கருதும் எழுத்துமுல அல்லது வாய்மூல ஆதாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவிற்கு உதவுவதற்காக துறை சார்ந்த விசேட அறிவு கொண்ட நபர்கள் மற்றும் சிறப்பு நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்

அதிகாரம் இருத்தல் வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.